மகா
# பிரதான ஆசாரியர்



'நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்', சங்கீதம் 110:4.

'அவரே (இயேசு) கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவார்; அவர் மகிமை பொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியருமாய் இருப்பார்', சகரியா 6:13.

மேலே கூறப்பட்டுள்ள வேதப்பகுதிகள், மெல்கிசேதேக்கைப்பற்றியவை.

**யார் இந்த மெல்கிசேதேக்கு, அவரது பண்புகள் என்ன?**

எபிரெயர் 7:1-4; மற்றும் ஆதியாகமம் 14:18-20; ஆகிய வேதப்பகுதிகளில், மிகவும் தெளிவாக இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி வாசிக்கமுடியும். மெல்கிசேதேக்கு சாலேமின் (எருசலேம்) இராஜாவும், உன்னதமான தேவனின் ஆசாரியருமாக இருந்தார். இவர் தேவனின் மகிமையானவர்; தேவனால் இராஜாவாகவும், தேவனின் ஆராதனையை நடத்தும் ஆசாரியராகவும் அபிஷேகம் பெற்றவர்.

இவர் சமாதானத்தின் இராஜா என்றும், நீதியின் இராஜா என்றும் அழைக்கப்படுகின்றார். இவரது பூர்வீகம் இந்த பூமிக்குரியதாக இல்லை; அதாவது இவருடைய தாய் மற்றும் தகப்பனைப்பற்றிய விபரம் அறிவிக்கப்படவில்லை. நாட்களின் தொடக்கமும், முடிவும் இல்லாதவர், அதாவது நித்திய ஜீவனையுடையவராக காணப்படுகின்றார்.

## மெல்கிசேதேக்கின் முறைமை என்றால் என்ன?



- *நித்தியமான முறை அல்லது வழக்கம்*
- *ஒரே தரம் பாவநிவாரண பலி செலுத்தப்படும் ஆராதனை*
- *ஒருவரே என்றும் நிரந்தரமான பிரதான ஆசாரியராக இருப்பார்*
- *நீதியும், சமாதானமும் நிலை நிறுத்தப்படும்*
- *நாட்களின் துவக்கமும், முடிவுமற்ற நிலை*
- *விசுவாசமுள்ளவர்களிடம் தசம்பாகம் பெற்றுக்கொள்ளும் கட்டளை*
- *மனுஷ உறவினால் ஆசாரியத்துவம் பெறாமல், மனுஷ பிறப்பின் ஆதாரமாக அமைந்த தேவ அன்பிற்கு அடையாளமாக விளங்குவது*

## எதற்காக பிதாவாகிய தேவன் இப்படி ஒரு புதிய ஏற்பாட்டை ஏற்படுத்தினார்?

தேவ லோகத்திலே, பிதாவின் நாமத்திலே ஆராதனையை பெற்றுக்கொள்ளும் தகுதியை உடையவர், நமது தந்தையாகிய கிறிஸ்து ஒருவரே. **இயேசுவே தேவனின் ரூபமும், சாயலுமானவர்** (கொலோசியர் 1:15).

இந்த பழைய ஏற்பாட்டிலே, பிரச்சினையை கொண்டு வந்தவன் பிசாசு என்று சொல்லப்படுகின்ற முன்னால் ஆராதனை கூட்டத்தலைவன் லூசிபர் (ஆசாரியன்). தேவமகிமையாக இருப்பவர் ஆராதனைக்குரியவர். இயேசுவே தேவனின் மகிமையானவர். லூசிபர் சுயமகிமையை தேடினதினால் வந்த விளைவு, அவன் தேவனுக்கு சத்துருவாகிப்போனான் (ஏசாயா 14:12-15). தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய நமது ஆண்டவர் வீற்றிருக்கும் வடபுறத்து ஆராதனை கூடத்தில் (சீயோன் பர்வதத்தில்) தான் அமர வேண்டும் என்று பேராசைப்பட்டவன் இந்த லூசிபர். அதுமாத்திரமல்ல, தேவனின் நட்சத்திரங்களுக்கு மேலாக, தனது சிங்காசனத்தை உயர்த்தவும் திட்டம் தீட்டினான் இவன். ஒரு ஆசாரியனுக்கு இவ்வளவு பெரிய ஆசை தேவையா?

சற்றே நாம் சிந்தித்துப்பார்ப்போம். இவனது யோசனைகளை நாம் எடுத்துக்கொள்ளலாமா? பாவத்திலே நாம் அடிமையாக ஜீவிப்பது, இவனது பொல்லாத யோசனைகளால்தான் என்பதை சற்றே உணர்ந்து பார்க்க வேண்டும்.

1 யோவான் 5:7 ல் இப்படியாக வாசிக்கின்றோம்.

**பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே; இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். இவர்கள் நித்திய ஜீவனில் வாழ்பவர்கள்.**

பரலோகத்திலே வாழும் பரிசுத்தவான்கள் அனைவரும் வெளிச்சத்தின் பிள்ளைகள், நித்திய ஜீவனையுடையவர்கள்.

தாவீது இப்படிப்பாடுகின்றார்:

**'நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே (பரலோகத்தில்) கர்த்தருடைய நன்மையை (இயேசுவை) காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்** (சங்கீதம் 27:13).

இது தாவீது இந்த பூமியிலே, தான் சரீரத்தில் வாழ்ந்த காலத்தில், பரலோகத்தை குறித்து சாட்சி பகிர்ந்தது.

ஆம் பிரியமானவர்களே!

நாமும் கூடத்தான், இந்த உலகத்தில் வாழும்போது, பரலோகத்திற்கு சாட்சியாக வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். தொடர்ந்து 1 யோவான் 5:8 ஐ வாசிப்போமானால், பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று என்று பார்க்கின்றோம்; அவையாவன: ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே; இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. தேவனுக்கு சாட்சியாக வாழத்தான் மனுஷனை அவர் உருவாக்கினார். ஆனால் இன்று மனிதர்களோ, அநீதிக்கு உடன் வேலையாட்களாய் ஜீவிக்கின்றனர். அநீதி எல்லாம் பாவம் என்று வாசிக்கின்றோம் (1 யோவான் 5:17). பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறான்.

அப்படியென்றால், அநீதியாகிப்போன சாத்தானுக்கு, இந்த உலகம் அடிமையாக இருப்பதை இதன்மூலம் நாம் உணர முடிகிறது.



## தேவனுடைய வீட்டிலே யார் அதிகாரியாக இருப்பது?

எபேசியர் 3:14,15; பிலிப்பியர் 2:8-11; கொலோசியர் 1:18-20

மேற்கூறிய வேதப்பகுதிகள் நமக்கு வெளிப்படுத்துகிற உண்மைகள் என்ன?

- பரலோகத்தில் உள்ளவர்களும் (தேவ தூதர்களும்), பூலோகத்திலுள்ளவர்களாகிய நாமும் இயேசுயென்ற ஒரே நாமத்திலே, பிதாவை தொழுதுகொள்ள வேண்டும் என்பது புதிய நியமமாக எழுதப்பட்டிருக்கிறது.
- இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாயும், மகிமையாகவுமிருக்கின்றார்.
- நமது முழங்கால்களை முடக்கி, தேவனைத்துதிக்க வேண்டும்; நமது இந்த ஆராதனையை பெற்றுக்கொள்ளும் தகுதியுடையவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே.
- இயேசு கிறிஸ்துவே சபையாகிய சரீரத்திற்கு தலையானவர்.

தேவனுடைய வீடு, ஆலயம்; இங்கே ஆராதனை செலுத்தப்படும். இந்த ஆராதனையை செலுத்துபவர்கள் இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகள். அப்படியென்றால், இங்கே யார் அதிகாரியாக இருக்க முடியும்.

## பிசாசு என்னதான் செய்துகொண்டு இருக்கிறான்?

நாம் இயேசுவின் பிள்ளைகளாகமல் தடுப்பது ஒன்றையே தொழிலாக செய்துகொண்டு இருக்கின்றான். இந்த ஈனப்பொழைப்பின் மூலம் கொஞ்சக்காலம், தனது தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளப்பார்க்கிறான். அது மாத்திரமல்ல, தேவலோகத்திலே நிறைவேறாத தனது ஆசையை தற்போது மறைமுகமாக செய்துகொண்டிருக்கும் இவன், கடைசி காலத்திலே (அந்திக்கிறிஸ்துவின்) வெளிப்படையாக செய்வான் என்று வேதம் நமக்குப் போதிக்கின்றது (2 தெசலோனிக்கியர் 1:3, 4).

## ஏன் இப்படி இவன் செய்கிறான்?

- விசுவாச துரோகம்
- தேவனுக்கு சமமாக தன்னை நினைக்கும் எண்ணங்கள்
- தேவனுக்கு எதிர்த்து நிற்க்கும் குணங்கள்
- சுயநலம்

மேற்கூறிய இந்தவகை குணாதிசியங்களை, தான் கொண்டிருப்பது மாத்திரமல்லாமல், மனுஷருக்கும் இலவசமாக வழங்கி, அவர்களையும் தனது சாயலிலே மாற்றி வருகிறான் சாத்தான்.

வேதத்திலிருந்து, சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட இரண்டு பிராதான ஆசாரியர்களை குறித்து இங்கே படிக்க இருக்கின்றோம். இவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்யாமல், சாத்தானுக்கு பணிவிடை செய்ததை அறிந்து கொள்ளலாம்.

ஆரோன் இந்த உலகத்தில் தேவனால், இஸ்ரவேலரிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட முதல் பிராதான ஆசாரியனாக காணப்படுகின்றான் (யாத்திராகமம் 4:16). மோசேயை தேவன், தம்முடன் பணிசெய்யவே அழைத்தார்; ஆனால், மோசே தன்னுடைய விசுவாசக்-குறைவை காண்பித்தபோது, அவனுக்கு வாயாக ஆரோனை தேவன் கொடுத்தார்.

## என்ன ஆயிற்று பாருங்கள்?



மோசே தேவனோடு சீனாய் மலையில், தேவ கட்டளைகளை பெற்றுக்கொண்டிருந்த வேலையில், பிசாசு இஸ்ரவேலரில் சிலரை வஞ்சித்துப்போட்டான். அப்பொழுது அவர்கள் கூட்டமாய் ஆரோனிடம் வந்து, எங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்த மோசேக்கு என்ன நேரிட்டதோ தெரியவில்லை; அதனால், எங்களை வழி நடத்திச்செல்ல தெய்வங்களை உண்டுபண்ணும் என்றார்கள். யாத்திராகமம் 32:4,5,24, இந்த மூன்று வசனங்களை கவனமாகப்படிக்கும் போது, நாம் ஒரு உண்மையை கண்டறியலாம். அது ஆரோனின் மனதிலே தோன்றிய கன்றுக்குட்டி என்பது தெளிவாகும். இஸ்ரவேலர் ஆரோனிடம் தெய்வங்களைத்தான் (பல தெய்வ வழிபாட்டுமுறையை) உண்டுபண்ண சொன்னார்கள்; ஆனால் அத்தகைய தெய்வங்களுக்கு வடிவத்தை கொடுத்தவன், இந்த பிராதான ஆசாரியனாக இருந்த ஆரோன் என்பதை நாம் உணரவேண்டும். இப்பொழுதும்கூட, சாத்தானின் பொல்லாத எண்ணங்களுக்கு, மனுஷராகிய நாம்தான் பல வடிவங்களை கொடுக்கிறோம். இதுதான் விசுவாச துரோகம். இதனால், ஆரோன்மேல் தேவனுக்கு கோபம் எழுந்ததை நாம் வாசிக்கலாம். நம்மில் அநேகர், இத்தகைய விசுவாச துரோகத்தைதான் செய்து வருகிறோம்.

## எப்படி?

தேவனுக்குப்பிரியமில்லாத எந்த பழக்கங்களானாலும், காரியங்களானாலும், அவைகள் விக்கிரகங்களே என்று வேதம் நமக்குப்போதிக்கின்றது. உதாரணமாக, பொருளாசை, விபசாரம் போன்றவைகள் (எபேசியர் 5:5).

அடுத்ததாக நாம் பார்க்கப்போகிற பிராதான ஆசாரியன் காய்பா என்று அழைக்கப்-பட்டவன். இந்த காய்பா இயேசுவின் மரணத்தைக்குறித்து ஆலோசனை கூறியவனாக காணப்படுகிறான் (யோவான் 18:14). இயேசுவை கிறிஸ்து என்று (அதாவது தேவ குமாரன் என்று) அறிகை செய்யாத ஒருவனும் நித்திய ஜீவனை அடையமுடியாது. இது வேதம் போதிக்கும் சத்தியம்; இதற்கு சாட்சி பகிர்பவர் பரிசுத்த ஆவியானவர். இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிந்து கொள்ளுவதே நித்திய வாழ்வு. காய்பாவிடம் நம் கர்த்தர் இந்த உண்மையை சொல்லிய வேலையிலே, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவ தூஷணத்தை கேட்டீர்களே என்று சொல்லி, இயேசுவை மரணத்திற்கு பாத்திரமானவராக ஒப்புவித்தான் (மத்தேயு 26:65,66).

நித்திய வாழ்வு, நம் ஒவ்வொருவருக்கும் இந்த உலகிலேயே வழங்கப்படுகிறது. ஆமாம், நாம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதும், பரிசுத்த ஆவியானவர் நம்மை

தேவனின் பிள்ளையாக அபிஷேகிக்கின்றார்; தொடர்ந்து சத்திய பாதையிலே வழி நடத்துகின்றார். இயேசுவின் பிள்ளைகள் சமாதான தூதர்கள், அதாவது பரலோக தேவனின் ஆராதனைக்காரர்கள். இவர்களது ஆராதனையைத்தான் தேவன் ஏற்றுக்கொள்கிறார், அவரது ஒரே பேரான குமாரனாகிய, இயேசுவின் நாமத்திலே.

ஏன் சாத்தான் இந்த ஆராதனையை தடுப்பதை, தன் தொழிலாக மாற்றிக்கொண்டான்?

ஒரு பாவி, தன் பாவத்தை (கீழ்ப்படியாமையை) உணர்ந்து, தேவனிடம் மனந்திரும்பும் போது, நமது இரட்சகர் அவனை தமது சொந்த பிள்ளையாக ஏற்றுக்கொள்கிறார். இதைத்தான் சாத்தான் எதிர்க்கின்றான். ஏனென்றால், இயேசுவின் இரத்தத்தில் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பெற்றவன்(ள்), தேவனின் உண்மையுள்ள ஆராதனைக்காரனாகிறான்(ள்). அப்பொழுது, சாத்தானிடமுள்ள வஞ்சிக்கப்பட்ட ஒரு ஆவிக்குப்பதிலாக (தள்ளப்பட்ட தூதன்), இந்த இயேசுவின் பிள்ளையை, தேவன் தமது பரலோக இராஜ்ஜியத்தில் சேர்த்துக்கொள்ளுகிறார். இதனால், சாத்தானின் முடிவு காலம் நெருங்க ஆரம்பிக்கின்றது. பரிசுத்த ஆவியானவர் உண்மைக்கு (இயேசுவுக்கு) சாட்சியாக வாழ்கிறார் (1 யோவான் 5:6). ஆகையால் அவரை நம் உள்ளத்திலே குடிவைப்போம்.

பரிசுத்த ஆவியானவர் நடத்தும் பரிசுத்த ஆராதனையை பெற்றுக்கொள்ளும் அதிகாரமுடையவர் நமது தந்தையான இயேசப்பா ஒருவரே. அவரே மெல்கிசேதேக்கின் முறைமையின்படி (இராஜாவும், ஆசாரியருமாய்) என்றென்றைக்கும் தேவ பர்வதத்திலே வீற்றிருந்து, நமது ஆராதனையை பெற்று, நம்மை சமாதானத்துடன் ஆளும் இராஜாவாகவும் இருக்கின்றார்.

அவர் ஆதிமுதல் தேவனோடு வாழும், தேவனின் தற்சுருபமாக காணப்படுகிறார். (கொலோசியர் 1: 16).



ஆமென்

கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.